சுருக்கம்

தமிழ் நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணி - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வழங்கும் உடற்கல்வி நிறைஞர் (MPES) பட்டத்தைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் பணி நியமனத்துக்கு உரிய தகுதியாக அங்கீகரித்து தெளிவுரைகள் வெளியிடப்படுகின்றன.

பள்ளிக்கல்வி (எம்1) துறை

அரசாணை (நிலை) எண். 27     130139     நாள் 31.1.2000

படிக்கப்பட்டவை:

1. பள்ளிக்கல்வி இயக்குநரின்கடித எண்.127510/சி22/96, நாள் 8.6.98.

2. தேர்வாணையக் கடித எண்.1939/ஆர்என்டி-எப்1/99 நாள் 11.10.99.

---

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வழங்கும் உடற்கல்வி நிறைஞர் ((MPES) பட்டத்தைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் பணியிடத்தில் நியமனம் செய்வதற்கு உரிய தகுதியாகக் கருதலாமா என் பள்ளிக்கல்வி இயக்குநரால் அரசிடம் தெளிவுரை கோரப்பட்டது.

2. மேற்காணும் கருத்துருவை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டது.

3. 21.9.99 அன்று நடந்த குழு கூட்டத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வழங்கும் உடற்கல்வியில் இளநிலைத் தகுதி பெறாமலே (without BPES) நேரடியாக வழங்கப்படும் உடற்கல்வி முதுநிலைப் பட்டத்தை ((MPES) அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் பணியிடத்தில் நியமனம் செய்வதற்கு உரிய தகுதியாகக் கருதலாம் என்று தேர்வாணையத்தின் பரிந்துரைக்குழு அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

4. குழுவின் பரிந்துரையை அரசு தீவிர பரிசீலனைக்கு பின் ஏற்றுக்கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வியியல் இளைஞர் (BPES) பட்டப்படிப்பு பயிலாமலேயே நேரடியாகப் பெறும் நிறைஞர் (MPES) பட்டத்தினை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் (PET)

பணிநியமனத்துக்கு உரிய கல்வித்தகுதியாகக் கருதலாம் என்று அரசு ஆணையிடுகிறது. இது குறித்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.ஏ.கௌரிசங்கர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை 6.

நகல்:
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை 2.
பதிவாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (ஆர்) துறை, சென்னை 9
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (இ) துறை, சென்னை 9
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச்செயலகம், சென்னை 9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.